# க.பொ.த(சா/த)

# கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள்

# புவியியல்

# (2016 – 2019)

# பகுதி I


தொகுப்பு :- திரு.நா.செல்வச்சந்திரன்

யா/அராலி இந்துக் கல்லூரி

0779356158

**2016**

- 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை இடைப்புக்குறியினுள்ளெ உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

01 சேர்க்கையின் அடிப்படையில் புவித்தொகுதியில் காணப்படும் உபதொகுதிகளின் எண்ணிக்கை ............ ஆகம்.

(இரண்டு / மூன்று / நான்கு)

02 புவி ஓடானது மூடியிவிருந்து .................... தொடர்ச்சியின்மையால் பிரிக்கப்படுகின்றது)

(கூற்றன்பேர்க்/ மோகோறோவிசிக் / லேமன்)

03 புவியிலுள்ள வளங்களுள் ...................... என்பது உயிரின வளங்களின் பிரிவைச் சேர்ந்ததாகும்.

(மண் / நீர் / காடுகள்)

04 உலகின் மிக உயரத்தில் அமைந்துள்ள மேட்டுநிலம் ..................... மேட்டுநிலமாகும்

(பாமீர் / திபெத்தியன் / மொங்கோலியன்)

05 ஏரியிலிருந்து உற்பத்தியாகும் ஓர் ஆறு ..................... ஆகும்.

(தேம்ஸ் / றைன் / நைல்)

06 செம்பூரான் மண் ............................ பயிர்ச்செய்கைக்குத் தேவையான சாதகமான காரணியாகும்.

(தெங்கு / இறப்பர் / தேயிலை)

07 தொலமைற்றுப்பாறை ......................... மாவட்டத்தில் பரந்தளவில் பரம்பிக் காணப்படுகின்றது.

(நுவரெலியா / யாழ்ப்பாணம் / மாத்தளை)

08 இலங்கையில் சக்தியை பிறப்பாக்கம் செய்வதற்காக பரந்தளவில் பயன்படுத்தப்படும் சக்திமூலம் ....................................... ஆகும்.

(நீர் / பெற்றோலியம் / உயிர்த்திணிவு)

09 உலகில் பிரதான குடித்தொகைச் செறிவு கொண்ட பிரதேசமாகக் கருதப்படுவது ................... ஆகும்.

(கிழக்கு ஆசியா / மத்திய அவுஸ்ரேலியா / கிழக்கு ஐரோப்பா)

10 இலங்கையில் 1:50000 இடவிளக்கப் படமானது 92 படத்தாள்களாகப் பிரிக்கப்பட்டு அச்சுப்பதிப்பு செய்யப்பட்டுள்ளது. அத்தாள்களுள் ஒன்றினால் உள்ளடக்கப்படும் நிலப்பகுதி ................. சதுரக் கிலோமீற்றர் ஆகும்.

(1000 / 10000 / 50000)

- 11 தொடக்கட் 15 வரை தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் ச யையும் பிழையாயின் பி யையும் சுற்றி வட்டமிடுக.

11 ரன்னா, தங்காலை, மித்தெனியா ஆகியவற்றினை இணைத்துக் காணப்படும் தெங்குப் பயிர்ச்செய்கை பகுதியானது சிறிய தெங்கு முக்கோணம் என அறியப்படும். (ச/பி)

12 உயரத்துக்கேற்ப வெப்பநிலை அதிகரித்துச்செல்வது மாறன் மண்டலத்தின் முனைப்பான பண்பாகும். (ச/பி)

13 இலங்கையின் மொத்த தொழிற்படையில் மிக உயர்ந்த சதவீதம் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளது. (ச/பி)

14 உலகின் மொத்தக் குடித்தொகையில் 75% ஆசியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய இரண்டு கண்டங்களில் காணப்படுகின்றது. (ச/பி)

15 கருங்கடல் முற்றாக நிலத்தினால் சூழப்பட்டுள்ள கடலாகம். (ச/பி)

- 16 தொடக்கம் 20 வரையுள்ள அ மற்றும் ஆ என இரண்டு நிரல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிரலில் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினது இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

16 புவி வளிமண்டலத்தின் பிரதான படைகள் நில அ நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. வளிமண்டலப் படைகளின் மேலேல்லையின் உயரங்கள் ஆ நிரலில் காட்டப்படுகின்ற. அ நிரலிலுள்ள ஒழுங்குடன் ஆ நிரலைப் பொருத்திப்பார்க்கும் பொழுது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 மாறன் மண்டலம் | A 50 km |
| 2 இடை மண்டலம் | B 20 km |
| 3 படை மண்டலம் | C 120 km |
| | D 80 km |

1 ACB 2 BDA 3 CDA 4 DBC (.............)

17 இலங்கையில் மின்சாரத்தினை உற்பத்தி செய்யம் நில சக்தி மூலங்கள் அ நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. இலங்கையில் சக்தி வலு நிலையங்கள் அமைவுபெற்றுள்ள சில இடங்கள் ஆ நிரலின்கீழ் தரப்பட்டுள்ளன. அ நிரலிலுள்ள ஒழுங்குடன் ஆ நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 காற்றுச்சக்தி | A புத்தளம் |
| 2 வெப்பசக்தி | B கொத்மலை |
| 3 சூரியசக்தி | C பருதகந்த |
| | D கெரவலபிட்டிய |

1 ABC 2 BCD 3 DAC 4 ADC (.............)

18 உலகின் சில இயற்கை அனர்த்தங்கள் அ நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. இயற்கை அனர்த்தங்களினுள் அடிக்கடி உளிதில் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் ஆ நிரலில் தரப்பட்டுள்ளன. அ நிரலிலுள்ள ஒழுங்குடன் ஆ நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 வரட்சி | A இந்தோனேசியா |
| 2 சூறாவளி | B மத்திய அத்திலாந்திக் சமுத்திரப்பகுதி |
| 3 காட்டுத்தீ | C வங்காள விரிகுடா |
| | D மத்திய ஆபிரிக்க சாகேல் பிரதேசம் |

1 ABC 2 DBC 3 DAB 4 DCA (.............)

19 இலங்கையில் பின்பற்றப்பட்டு வரும் சில பொருளாதார நடவடிக்கைகள் அ நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. பொருளாதார நடவடிக்கைகள் பரம்பிக் காணப்படும் சில பகுதிகள் ஆ நிரலில் காட்டப்படுகின்றன. அ நிரலிலுள்ள ஒழுங்குடன் ஆ நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 உவர்நீர் மீன்பிடி நடவடிக்கைகள் | A அம்பேவல |
| 2 சிறு ஏற்றுமதிப் பயிர்ச்சசெய்கை | B நீர்கொழும்பு |
| 3 பாற்பண்ணை | C மாத்தளை |
| | D கண்டி |

1 BCA 2 ABC 3 BDC 4 CBA (.............)

20 உலகில் இரும்பு மற்றும் உருக்கினை உற்பத்தி செய்யும் சில முன்னணி நாடுகள் அ நிரலில் தரப்பட்டுள்ளன. இருமபு மற்றும் உருக்கினை உற்பத்தி செய்யும் பிரதேசங்கள் ஆ நிரலில் தரப்பட்டுள்ளன. அ நிரலிலுள்ள ஒழுங்குடன் ஆ நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 சீனா | A குஸ்நெட்ஸ் பிரதேசம் |
| 2 ஐக்கிய இராச்சியம் | B மஞ்சூரியப்பிரதேசம் |
| 3 ரஷ்யா | C பேர்மிங்காம் பிரதேசம் |
| | D கிளாஸ்கோ பிரதேசம் |

1 ADB 2 BCD 3 DAC 4 BCA (.............)

- 21 தோர்டுக்கும் 25 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைக் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

21 புவியின் கற்கோளமானது ஒன்றுடனொன்று தொடர்புபட்ட வகையில் மிகவும் மெதுவாக நகரும் பல்வேறு ........................ கொண்டமைந்துள்ளது.

22 23 ½ பாகை தென்அகலக்கோடு ................. என அறியப்படும்.

23 இலங்கையில் அகழ்ந்தெடுக்கப்படும் காரியமானது படையமைப்பிலானது மற்றும் ....................... என வகைப்படுத்தப்படுகின்றது.


24 படங்களின் பாகுபாட்டின்படி ஒரு குறிப்பிட்டட விடயத்தினைக் காட்டுவதற்கு மட்டும் வரையப்படும் படங்கள் ............................. படங்கள் என அழைக்கப்படும்.

25 சர்வதேச கடல் சட்டத்தின்படி இலங்கையின் ஆள்புலக் கடல் எல்லையானது கரையோரக் கோட்டிலிருந்து ................................. கடல்மைல் வரையுள்ள வலயமாகக் கருதப்படும்.


- தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைப் பயன்படுத்தி **26** ஆம், **27** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

**26.** கல்லோயா சேனாநாயக்க சமுத்திரம் அமைந்துள்ள மாவட்டத்தினை ...............என்னும் எழுத்து காட்டுகின்றது.

**27.** இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் பகுதிகளில், 'நடுத்தர மலைநாட்டுத் தேயிலை' வளரும் மாவட்டம் ஒன்று .............. என்னும் எழுத்தினால் காட்டப்படுகின்றது.




- 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் இறக்குமதி மூலங்கள் வரைபொன்றில் தரப்படுகின்றது. அதனை நன்கு பரிசீலித்து **28** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




(மூலம் : இலங்கை மத்திய வங்கி அறிக்கை - 2015)

**28.** வரைபின்படி, 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவான பொருட்கள் ..........................................நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டன.

**29.** 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கு மிகக் குறைந்தளவான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட நாடு ..........................................................................ஆகும்.

**30.** 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் இறக்குமதி மூலங்களைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மேற்படி வரைபு முறையானது ................................................... என அறியப்படும்.

Department of Examinations, Sri Lanka

- 31 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தினை எதிரெயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

31 வானவெளியிலிருந்து புவிக்கு வரும் பெரும்பாலான ஆகாயக் கற்கள் எரிந்து அழிந்துவிடுவது

1 மாறன் மண்டலத்திலாகும் 2 படை மண்டலத்திலாகும்.

3 வெப்ப மண்டலத்திலாகும் 4 இடைம ண்டலத்திலாகும் (...........)

32 கண்ட ஓடு கொண்டிருப்பது

1 சிலிக்கேற்றுக்கள் 2 எரிமலைக் குழம்புப்பாறைகள்

3 கரங்கற் பாறைகள் 4 மக்னீசியம் (...........)

33 பின்வரும் கூற்றுக்களுள் உயிர்க்கோளம் பற்றிய பிழையான கூற்றினைத் தெரிவுசெய்க.

1 உயிர்க்கோளம் என்பது முழு உயிர்ச்சூழலையம் குறிப்பதுடன் எல்லாக் காலங்களிலும் இடைவிடாது தொழிற்படுகின்றது.

2 ஒளித்தொகுப்புச் செயன்முறையானது உயிர்க்கோளத்திற்குள் இடம்பெறுகின்றது.

3 உயிர்க்கோளத்தில் தாவரம் மற்றும் விலங்கின வாழ்வுக்கிடையில் ஓர் இடைத்தொடர்பு காணப்படுகின்றது.

4 கற்கோளத்தினையும், நீர்க்கோளத்தின் பகுதிகளையும் மொத்தமாக உயிர்க்கோளம் கொண்டிருக்கின்றது. (...........)

34 அயன வலயம் என அறியப்படுவது

1 மத்தியகோட்டிற்கும் கடகக்கோட்டிற்கும் இடைப்பட்ட வலயமாகும்.

2 கடகக்கோட்டிற்கும் மகரக்கோட்டிற்கும் இடைப்பட்ட வலயமாகும்.

3 மகரக்கோட்டிற்கும் அந்தாட்டிக்கோட்டிற்கும் இடைப்பட்ட வலயமாகும்.

4 மத்தியகோட்டிற்கும் மகரக்கோட்டிற்கும் இடைப்பட்ட வலயமாகும். (...........)

- கீழே தரப்படும் தகவல்களைப் பயன்படுத்தி 35 மற்றும் 36ஆம் வினாக்களுக்கான விடையைத் தருக.

A ஓசோன் படையின் தேய்வு B மண்அரிப்பு

C புவிமேற்பரப்பினை வந்தடையும் மோசமான ஞாயிற்றுக் கதிர்கள்

D விவசாய விளைச்சல் E வளிமண்டல செயற்பாடுகள்

35 ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பினால் மற்றைய காரணியில் ஏற்படும் வீழ்ச்சியைக் குறித்துக்காட்டும் இரண்டு விடயங்களைக் கொண்டிருக்கும் விடையானது

1 Aமற்றும் C 2 A மற்றும் D 3 C மற்றும் E 4 B மற்றும் D (...........)

36 ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பினால் மற்றைய காரணியில் ஊற்படும் அதிகரிப்பினைக் குறித்துக் காட்டும் இரண்டு விடயங்களைக் கொண்டிருக்கும் விடையானது

1 Aமற்றும் C 2 C மற்றும் E 3 A மற்றும் E 4 B மற்றும் D (...........)

37 மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின்படி உலக நாடுகளை பிரிக்கக்கூடிய பிரிவுகள்னி எண்ணிக்கை

1 2ஆகும் 2 3 ஆகும் 3 4 ஆகும் 4 5 ஆகும் (.............)

38 பின்வருவனவற்றுள் எது மானிட நடவடிக்கைகளினால் தூண்டப்படுகின்ற இயற்கை இடராகக் கருதப்படுகின்றது

1 புவிநடுக்கங்கள் 2 எரிமலை வெடிப்புக்கள் 3 சுனாமி 4 நிலச்சரிவுகள் (........)

39 ரத்தோட்டை, மீட்டியாகொட மற்றும் பொரலஸ்கமுவ போன்ற பகுதிகளில் பரம்பிக் காணப்படும் கனியமானது

1 காரீயம் 2 சுண்ணாம்புக்கல் 3 வெண்களி 4 இரத்தினக்கல் (.......)

40 இலங்கையில் நிலச்சரிவுகள் அடிக்கடி நிகழும் இரண்டு மாவட்ட சோடிகளைத் தெரிவுசெய்க.

1 கேகாலை, நுவரெலியா 2 மாத்தளை, குருநாகல்

3 கண்டி, பெலநறுவை 4 பதுளை, கம்பஹா (...........)

## 2017

- 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை இடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

01 வளிமண்டலத்தில் உள்ள மொத்த வாயுக்களின் கொள்ளவில் ஏறக்குறைய ............ புவி மேற்பரப்பிலிருந்து ஏறக்குறைய 6 கி.மீற்றர் வரையுள்ள பகுதியில் காணப்படுகின்றது.

(25% / 50 % / 75%)

02 உயரத்துடன் வெப்பநிலை வீழ்ச்சியடைந்து செல்வது ............... மண்டலத்தின் ஒரு விசேட அம்சமாகும்.

(மாறன் / படை / வெப்ப)

03 பப்புவா நியுகினியா தீவானது ........... கண்டமேடையில் அமைந்துள்ளது.

(ஆசியா / ஆபிரிக்கா / அவஸ்ரேலியா)

04 டானியுப் ஆறு ............. கடலுக்குள் பாய்கின்றது

(மத்தியதரை / கருங் / கஸ்பியன்)

05 மேற்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளுள் ................. வர்த்தக ரீதியான பாற்பண்ணைக் கைத்தொழிலுக்குப் புகழ்பெற்றது.

(இத்தாலி / பிரான்ஸ் / டென்மார்க்)

06 உவரான மணல் மண்ணும் தொடரலை நிலமும் ........... பயிர்ச்செய்கைக்கு மிகவும் பொருத்தமானது

(தெங்கு / நெல் / இறப்பர் )

07 இலங்கையில் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் ஆராய்ச்சி நிறுவகம் ............... இல் அமைந்துள்ளது.

(கண்டி / மாத்தளை / அம்பாந்தோட்டை)

08 இலங்கையில் மரபுரீதியான குடிசைக்கைத்தொழிலாக விளங்கும் பித்தளைப் பொருட்களின் கைத்தொழிலுக்குப் பிரசித்திபெற்ற இடமாக ..................... முக்கியத்துவம் பெறுகிறது.

(அம்பலாங்கொட / மொறட்டுவ / பிலிமத்தலாவ)

09 1:50000 இடவிளக்கப் படங்களில் திசையைக் காட்டும் வரைபடத்தில் நட்சத்திரத்துடன் முடிவடையும் கோட்டினால் ........................ குறித்துக் காட்டப்படுகின்றது.

(உண்மை வடக்கு / காந்த வடக்கு / அளியடைப்பு வடக்கு )

10 ........................... இலங்கையில் கடும் பாதுகாப்புக்கு உட்பட்ட இயற்கை ஒதுக்கிடப் பகுதியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

(றிட்டிகல / வில்பத்து / ஹோட்டன் சமவெளி )

- 11 தொடக்கட் 15 வரை தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் ச யையும் பிழையாயின் பி யையும் சுற்றி வட்டமிடுக.

11 இந்தோ - .லங்கை எல்லைக்கோட்டுக்குரியதாகக் காணப்படம் மன்னார் கடல்பகுதி, பாக்கு நீரிணை, வங்காள விரிகுடா ஆகியவற்றினை உள்ளடக்கிய சமுத்திர எல்லைக்கோடானது வரலாற்று நீர்கள் என அழைக்கப்படும். (ச / பி)

12 இலங்கையில் பரந்தளவில் பயன்படுத்தப்படும் சக்தி மூலாதாரம் பெற்றோலியமாகும். (ச / பி)

13 உலகில் மொத்தக் குடித்தொகையில் ஏறக்குறைய 90% தென்னோளத்தில் காணப்படுகின்றது. (ச / பி)

14 மானிட அபிவிருத்திச்சுட்டியின்படி உலக நாடுகள் நான்கு அபிவிருத்திப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. (ச / பி)

15 கி.பி 2000ஆம் ஆண்டின் பின்னர் ஊகுஊ வெளியேற்றத்தினை இழிவளவாக்கும் நடவடிக்கைகள் மற்றும் அவற்றினை முற்றாக இல்்ாமல் செய்தல் தொடர்பான தீர்மானமனது 1992இல் இடம்பெற்ற புவி உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்டது (ச / பி)

- 16 தொடக்கம் 19 வரையுள்ள அ மற்றும் ஆ என இரண்டு நிரல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிரலில் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினது இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

16 இலங்கையில் காணப்படும் சில கனிப்பொருட்கள் நிரல் அ இல் தரப்பட்டுள்ளன. இவை படிந்த காணப்படும் இடங்கள் நிரல் ஆ இல் தரப்பட்டுள்ளன. அ நிரலிலுள்ள ஒழுங்குடன் ஆ நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 இரத்தினக்கல் | A புல்மோட்டை |
| 2 சர்கோன் | B ஒக்கம்பிட்டிய |
| 3 காரீயம் | C மீரிகம |
| | D மாரவில |

1 ABC 2 BCA 3 BDA 4 BAD (.........)

17 இலங்கையில் பரந்தளவில் காணப்படும் சில மண் வலயங்கள் நிரல் அ இல் காட்டப்படுகின்றன. அவை பரம்பிக் காணப்படும் பகுதிகள் நிரல் ஆ இல் தரப்படுகின்றன. அ நிரலிலுள்ள ஒழுங்குடன் ஆ நிரலைப் பொருத்திப்பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 கல்சியமற்ற கபிலமண் | A புத்தளத்திலிருந்து முல்லைத்தீவு வரையான கரையோரப்பகுதி |
| 2 செமமஞ்சல் லட்சோல் மண் | B அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் |
| 3 சொலிடெக்ஸ்மண் | C தமண மற்றும் தமன்கடுவைப் பிரதேசம் |
| | D தாழ்நில ஈரவலய மாவட்டங்கள் |

1 ABC 2 BCD 3 DBA 4 BAC (.........)

18 உலகின் சில கண்டங்களின் பெயர்கள் நிரல் அ இல் தரப்பட்டுள்ளன. அவற்றில் அமைந்துள்ள ஏரிகளின் பெர்கள் நிரல் ஆ இல் தரப்பட்டுள்ளன. அ நிரலிலுள்ள ஒழுங்குடன் ஆ நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 ஆசியா | A லடோகா ஏரி |
| 2 ஐரோப்பா | B ரிட்ரிக்காகா ஏரி |
| 3 அவஸ்ரெலியா | C பைக்கால் ஏரி |
| | D அயர் ஏரி |

1 ACB 2 CDA 3 CAD 4 BAC (.........)

19 நெற்பயிர்ச்செய்கையில் ஈடபடம் மூன்ற நாடுகள் நிரல் அ இல் காட்டப்படகின்றன. இந்நாடுகளில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் சில ஆற்றுப் பள்ளத்தாக்குகள் நிரல் ஆ இல் காட்டப்படுகின்றன. அ ஒழுங்குடன் ஆ நிரலைப் பொரத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 ஐக்கிய அமெரிக்கா | A போ நதிப்பள்ளத்தாக்கு |
| 2 அவஸ்ரேலியா | B சக்ரமன்ரோ ஆற்றுப்பள்ளத்தாக்கு |
| 3 இத்தாலி | C நைல் கழிமுகம் |
| | D மறேடார்லிங் ஆற்றுப் பள்ளத்தாக்கு |

1 BDA 2 DAB 3 ABC 4 BCD (.........)

- 20 தொடக்கம் 25 வரையள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களக்கப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

20 மரியானா மற்றும் மின்டோனா சமுத்திர அகழிகள் ................. சமுத்திரத்தில் அமைவு பெற்றுள்ளன.

21 கிழக்கு ஆசியப் பிரதேசத்தில் இலத்திரனியல் கைத்தொழில் துறையில் ........... மேலாதிக்கத்தைப் பெற்றுவுரும் நாடாகும்.

22 வடக்கு அகலக்கோடு 23 ½ பாகை என்பது அயன .......... என அறியப்படும்.


23 இலங்கையின் மலைப்பகுதிகளில் நெல்லானது ............... பயிர்ச்செய்கை முறைப்படி பயிரிடப்படுகிறது.

24 இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத் துறையிலிருந்து அதிகளவான பங்களிப்பு .......................... பயிர்ச்செய்கை மூலம் வழங்கப்படுகின்றது.

25 1:50000 இடவிளக்கப் படங்களில் நிலவுருவங்களானது .................. மூலம் காட்டப்படுகின்றது.

26 காலத்துடன் தொடர்ச்சியாக மாற்றமடைந்து வரும் வெப்பநிலை போன்ற மாறிகளை எடுத்துக்காட்டுவதற்கு பரந்தளவில் ................. வரைபுகள் பயன்படுத்தப்படுகின்றன.

- 27 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தரப்பட்டுள்ள வரைபடத்தினைப் பயன்படுத்துக.




**27.** வரைபடத்தில் **A-B** கோட்டினால் ........................................ சாய்வு ஒன்று குறித்துக் காட்டப்படுகின்றது.

**28.** வரைபடத்தில் **C-D** கோட்டினால் குறித்துக் காட்டப்படும் நிலவுருவம் ........................................ ஆகும்.

**29.** வரைபடத்தில் **E-F** கோட்டினால் குறித்துக் காட்டப்படும் நிலவுருவம் ........................................ எனப்படும்.

**30.** வரைபடத்தின்படி, இப்பகுதியானது ........................................ வடிகால் பாங்கினைக் கொண்டிருக்கின்றது.

- 31 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தினை எதிரெயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

31 உருமாறிய பாறைக்கான ஓர் உதாரணம்

1 நிலக்கரி  2 வைரங்கள்  3 கருங்கல்  3 எரிமலைக் குழம்புப்பாறை

32 நுல்லபார் சமவெளிகள் அமைந்துள்ள இடம் எது?

1 அவுஸ்ரேலியா  2 இந்தியா  3 தென் ஆபிரிக்கா  4 ரஷ்யா

33

- 300 mm – 500 mm இற்கும் இடையில் மழைவீழ்ச்சி
- தாவரத்தின் வளர்ச்சிப் பருவத்தில் குளிரான ஈரக் காலநிலை
- சிறந்த வடிநிலச் சமவெளி
- சோணோசம் மண்

- மேலேயுள்ள பௌதிகக் காரணிகள் எந்தப் பயிர்ச்செய்கைக்கு மிக முக்கியமானது

1 நெல்  2 பார்லி  3 கோதுமை  4 தினை

34 பாற்பசுக்களைப் பரிமாற்றம் செய்வதற்காக அமைக்கப்பட்ட இலங்கையின் விலங்குப் பாற்பண்ணை நிலையம் அமைந்துள்ள இடம்

1 அம்பேவெல  2 கனன்வில்ல  3 வல்பிட்ட  4 மீவனபலன

Department of Examinations

35 இலங்கையின் ஏற்றுமதிக் கிராமங்கள் சிலவற்றின் அமைவிடங்கள் அ நிரலில் தரப்பட்டுள்ளன. இவ்வமைவிடங்களுடன் தொடர்புபட்ட ஏற்றுமதிப் பயிர்கள் நிரல் ஈ அல் காட்டப்படுகின்றன. அ நிரலிலுள்ள ஒழுங்குடன் ஆ நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 தம்பதெனியா | A வெற்றிலை |
| 2 இராஜாங்கனை | B முந்திரி |
| 3 கட்டுகம்பொல | C மிளகாய் |
| | D பூக்கள் |

1 ABD 2 BCA 3 DCB 4 CAB (.........)

36 இலங்கையின் நீர்மின்வலு நிலையங்களுடன் தொடர்புபட்ட மூன்று ஆறுகள் அ நிரலில் தரப்பட்டுள்ளன. இவ் ஆறுகளுடன் இணைந்து காணப்படும் வலு நிலையங்கள் ஆ நிரலில் காட்டப்படுகின்றன. அ நிரலிலுள்ள ஒழுங்குடன் ஆ நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 களனிஆறு | A விக்டோரியா |
| 2 மகாவலிஆறு | B கனியொன் |
| 3 களுகங்கை | C இங்கினியாகலை |
| | D குக்கிளே கங்கை |

1 DAC 2 ABC 3 BAD 4 BCD (.........)

37

- முன்னறிவிப்புத் தொகுதிகளை நிறுவுதல்
- சமூக வழிப்புணர்வை உருவாக்குதலும் சமூகத்தின் பங்கேற்பும்
- அனர்த்த முகாமைத்துவத்துவ நிறுவகங்களை வலுவூட்டல்

அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புள்ள மெற்கூறப்பட்ட நடவடிக்கைகள் அடங்குவது அனர்த்த முகாமைத்துவ வட்டத்தின் எந்த நிலையுடன் ஆகும்

1 முன் ஆயத்தம் 2 துலங்கல் 3 மீளப்பெறல் 4 தணிப்பு

38 இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கினைப் பரந்தளவில் பாதிக்கும் சூறாவளி இடர்கள் எந்தப்பருவ காலத்தில் இடம்பெறுகிறது

1 ஒக்டோபர் மற்றும் நவம்பர் 2 மார்ச் மற்றும் ஏப்பிரல்

3 ஜனவரி மற்றும் பெப்பிரவரி 4 யூலை மற்றும் ஆகஸ்ட்

- 39 மற்றும் 40 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

A பால் விகிதம் B வயது முதிர்ந்தோர் சனத்தொகை C வளிமாசடைதல்

D பரும்படியான இறப்பு வீதம் E எரிபொருட் பயன்பாடு

39 ஒரு காரணியில் ஏற்படும் வீழ்ச்சியானது இன்னொரு காரணியில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதைக் குறித்துக்காட்டும் கூற்றுக்களைக்கொண்ட இரு எழுத்துக்களை உள்ளடக்கிய விடை

1 D மற்றும் B 2 A மற்றும் B 3 C மற்றும் D 4 A மற்றும் D

40 ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பானது இன்னொரு காரணியில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதைக் குறித்துக்காட்டும் கூற்றுக்களைக் கொண்ட இரு எழுத்துக்களை உள்ளடக்கியவிடை

1 A மற்றும் B 2 C மற்றும் D 3 E மற்றம் C 4 B மற்றும் A

**2018**

- 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை இடைப்புக்குறியினுள்ளெ உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1 பூகோளநீரின் கொள்ளளவில் .................. மாத்திரமே மனித நுகர்வுக்காகப் பயன்படுத்தக்கூடிய நன்னீராகக் காணப்படுகின்றது.

(1% / 2.5% / 8%)

02 புவியானது தனது சுற்றுவட்டத் தளத்திற்கு ...........................சரிவாகக் காணப்படுகின்றது.

(12% / 2.5% / 8%)

03 தாவர இலைகயில் காணப்படும் நீரானது .................... ஊடாக வளிமண்டலத்துடன் சேர்க்கப்படுகின்றது. .

(ஆவியாக்கம் / ஆவியுயிர்ப்பு / ஒடுங்கல்)

04 மடகஸ்கார் தீவானது ............... கண்ட மேடையில் அமைந்துள்ளது

(ஆசியா / ஆபிரிக்கா / அவஸ்ரேலியா)

05 அயர் ஏரி .................................... இல் அமைந்துள்ளது

(அவஸ்ரேலியா / ஐரோப்பா / தென்ஆபிரிக்கா)

06 இலங்கையில் அதிகளவான நெல் நிலங்கள் ..................... மாவட்டத்திவ் அமைந்துள்ளது.

(குருநாகல் / அனுராதபுரம் / அம்பாறை)

07 தேயிலை பயிரிடப்படும் இலங்கையின் மாவட்டங்களுள் மத்திய நிலத்தோயிலைப் பயிர்ச்செய்கைக்கு முக்கியத்துவம் பெற்றது ............. மாவட்டமாகும்.

(நுவரேலியா / இரத்தினபரி / பதுளை)

08 இலங்கையிலிருந்து அதிகளவில் நாள வடிவான படைக்காரீயத்தைக் கொள்வனவு செய்யும் நாடு ......................... ஆகும்.

(ஜப்பான் / சீனா / ஐக்கிய அமெரிக்கா)

09 .......................... என்னும் நீர்மின் வலு நிலையம் களனி ஆற்றுடன் தொடர்புபட்டதாக அமைந்துள்ளது.

(களனிதிஸ்ஸ / சப்புகஸ்கந்த / கனியோன்)

10 இலங்கையின் 1:50000 இடவிளக்கப் படங்களில் சமவுயரக்கோட்டு இடைவெளி .......... மீற்றர்களாகக் காணப்படுகின்றது.

(20 / 100 / 500)

- 11 தொடக்கட் 15 வரை தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் ச யையும் பிழையாயின் பி யையும் சுற்றி வட்டமிடுக.

11 கோதுமை பெருந்தோட்ட விவசாயத்தின் கீழ் பயிரிடப்படும் பிரதான பயிராகும். (ச / பி)

12 இலங்கையின் பயிர் நிலத்தில் 28% அளவில் தெங்குச்செய்கை இடம்பெறுகின்றது. (ச / பி)

13 உலகில் உருக்கு உற்பத்தியிலும் ஏற்றுமதயிலும் சீனா முக்கியத்துவம் பெற்ற நாடாகும். (ச / பி)

14 ரதாவடுன்ன இலங்கையில் முகமூடிக் கைத்தொழிலுக்கு விசேட முக்கியத்துவம் பெற்ற பிரதேசமாகும். (ச / பி)

15 இலங்கையின் மண் வகைகளுள் செங்கபில் நிற மண் வரண்ட வலயத்தில் மாத்திரமே காணப்படுகின்றது. (ச / பி)

- 16 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.

16 இலங்கையின் மொத்த சனத்தொகையில் 5.2% அளவிலான குறைந்தளவு சனத்தொகை ............. மாகாணத்திலேயே காணப்படகின்றது.

17 சார்க் நாடுகளிடையே மிக உயர்வான மானிட அபிவிருத்தியைக் கொண்ட நாடு ...................... ஆகும்.

18 இயற்கை இடர்களின் பாகுபாட்டின்படி புவி நடுக்கங்களும், சுனாமியும் .................. இடர் வகையைச் சார்ந்தவையாகும்.

19 ஹெக்லா எரிமலை அமைந்துள்ள நாடு .................ஆகும்.


20 பெரிய பிரிப்பு கற்பார் தொடர் ....................... பாறைகளினால் உருவாக்கப்பட்டது.

21 தென்அமெரிக்காவில் காணப்படும் ................. காடு உலகிலேயே மிகப்பெரிய மழைக்காடாகக் கரதப்படுகின்றது.

22 இலங்கையின் சுற்றுலா அபிவிருத்திச்சபையினால் இலங்கையானது பிரதான ....................... சுற்றுலா வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

- **23** தொடக்கம் **26** வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் வரைபினைப் பயன்படுத்துக.

**இலங்கையின் பெரும்போகம் மற்றும் சிறுபோகத்தின் நெல் உற்பத்தி - 2009 - 2017**



Department of Examinations

மூலம் : இலங்கையின் மத்திய வங்கி, இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் - 2018

23 பெரும்போகத்தில் மிக உயர்வான நெல் உற்பத்தியைக் கொண்டிருக்கம் வருடம் .............

24 சிறுபோகத்தில் மிகக் குறைவான நெல் உற்பத்தியைக் கொண்டிருக்கும் வருடம் ................

25 சிறுபோக மற்றும் பெரும்போகப் பருவங்கள் இரண்டிலும் அதிகளவு நெல் உற்பத்தி சார்பளவில் ............................... ஆம் ஆண்டிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது.

26 சிறுபோக மற்றும் பெரும்போகப் பருவங்களில் பெறப்பட்ட உற்பத்திகளில் அதிகளாவன இடைவெளி .................... ஆம் ஆண்டிலேயே பதிவாகியுள்ளது.

- 27 தொடக்கம் 30 வரையுள்ள அ மற்றும் ஆ என இரண்டு நிரல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிரலில் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினது இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

27

| அ | ஆ |
|---|---|
| பிரதான சமுத்திரங்கள் | அமைந்துள்ள கடல்கள் |
| 1 அத்திலாந்திக் சமுத்திரம் | A மஞ்சள் கடல் |
| 2 இந்து சமுத்திரம் | B கரீபியன் கடல் |
| 3 பசுபிக் சமுத்திரம் | C அந்தமான கடல் |
| | D வெள்ளைக்கடல் |

1 BCA  2 BCD  3 CDA  4 DBC  (........)

28

| அ | ஆ |
|---|---|
| கனிய வகைகள் | படிவுகளின் அமைவிடம் |
| 1 வெண்களி | A போகல |
| 2 இல்மனைட் | B புல்மோட்டை |
| 3 காரீயம் | C எப்பாவல |
| | D பொரலஸ்கமுவ |

1 ABC  2 CDA  3 DBA  4 DCA  (........)

29

| அ | ஆ |
|---|---|
| வனவிலங்கு ஒதுக்கிடங்கள் | அமைவிடங்கள் |
| 1 தேசிய பூங்காக்கள் | A உடவளவை |
| 2 பாதுகாக்கப்பட்ட இயற்கை ஒதுக்கிடங்கள் | B வீரவில |
| 3 சரணாலயங்கள் | C சிங்கராஜா |
| | D ஹக்கல் |

1 ACB  2 ADB  3 BAC  4 BCD  (........)

30

| அ | ஆ |
|---|---|
| நாடு | மில்லியன் நகரம் |
| 1 ஐக்கிய அமெரிக்கா | A பிலடெல்பியா |
| 2 பிறேசில் | B சியோல் |
| 3 தென்கொரியா | C ஷாஹ்காய் |
| | D றியோ டி ஜெனிரோ |

1 BCA  2 BCD  3 CDA  4 DBC  (........)

- 31 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தினை எதிரெயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

31 பருப்பு வகைப் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையம் அமைவு பெற்றுள்ள இடம்

1 மாத்தளை 2 அங்குனகொலபெலஸ்ச 3 கன்னொறுவ 4 பட்டஅத்த (..........)

32 இரண்டு வகையான அடையல் பாறைகளைக் கொண்டிருக்கும் விடையினைத் தெரிவு செய்க.

1 நிலக்கரி, ஜிப்சம் 2 கருங்கல், பசோல்ட்

3 வைரங்கள், தொலமைற்று 4 சுண்ணாம்புக்கற்கள், காப்ரோ (..........)

33 கனியங்களின் பாகுபாட்டிற்கேற்ப உலோகம் அல்லாத பிரிவைச் சேர்ந்த கனியம் ஒன்று

1 ரூற்றைல் 2 மங்கனீஸ் 3 இரும்புத்தாது 3 காரீயம் (..........)

34 அயன மண்டல மழைக்காடுகளில் மட்டுமே காணக்கூடிய தாவர மற்றும் விலங்குப் பரிவைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

1 மென்மையான மரணத்துண்டுகளைக்கொண்ட நேரான தண்டுகளையுடைய தாவரங்கள், மரை, புலி

2 வன்மையான உட் பகுதிகளைக் கொண்ட மரங்கள் புலி, ஓநாய்

3 ஊசியிலைகளைக் கொண் தாவரங்கள் துருவ மான், மரை

4 அதிகளவான இலைகளையும் அகன்ற இலைகளையும் கொண்ட தாவரங்கள், கொரில்லா, புலி (..........)

35 அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய சில தகுதிவிதிகள் கீழே தரப்பட்டுள்ளன


- பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு
- எழுத்தறிவு
- கொள்வனவுச் சக்திக்கு சரிசெய்யப்பட்ட தலா மொத்த தேசிய உற்பத்தி

மேலேயுள்ள தகுதிவிதியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அபிவிருத்தியை அளவிடும் சட்டெண்

1 பௌதீக வாழ்க்கைத்தரப் பண்புச்சுட்டெண் 2 மானிட வறுமைச்சுட்டெண்

3 மானிட அபிவிருத்திச் சுட்டெண் 4 மானிட துயரச் சுட்டெண்

**36.** 1:50,000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட படமொன்றில் எடுத்துக்காட்டப்படும் நான்கு நெற் காணித்துண்டுகளின் நீளமும் அகலமும் கீழேயுள்ள A, B, C மற்றும் D என்னும் வரிப்படங்களில் காட்டப்பட்டுள்ளன.




இவற்றுள் 1 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட நெற் காணித்துண்டைக் காட்டும் வரிப்படத்துக்குரிய எழுத்தினைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

(1) A (2) B (3) C (4) D (.........)

● கீழே A, B, C மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டிருக்கும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட தலைப்புச் சோடிகளை நன்கு பரிசீலித்து **37** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

A - 1. கைத்தொழிலாக்கம்
- 2. அமில மழை

B - 1. கல்வி
- 2. மனித வளம்

C - 1. சூழலியல் சமநிலை
- 2. நிலைபேண் அபிவிருத்தி

D - 1. பூகோள மயமாக்கம்
- 2. அபிவிருத்தி

**37.** முதலாவது நிலைத்திருப்பதற்கு இரண்டாவது அவசியம் என்பதைக் குறிப்பிடும் தலைப்புச் சோடியைக் கொண்டிருக்கும் விடை எது?

(1) A (2) B (3) C (4) D (.........)

**38.** இரண்டாவதில் ஏற்படும் விருத்திக்கு முதலாவது பொறுப்பாகக் காணப்படும் என்பதைக் குறிப்பிடும் தலைப்புச் சோடி எது?

(1) A (2) B (3) C (4) D (.........)

**39.** இரண்டாவது, முதலாவதினால் ஏற்படும் சாதகமற்ற விளைவு என்பதைக் காட்டும் தலைப்புச் சோடி எது?

(1) A (2) B (3) C (4) D (.........)

**40.** முதலாவது இரண்டாவதில் சாதகமான விளைவுகளைப் போன்றே பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியது எனக் குறிப்பிடும் தலைப்புச் சோடி எது?

(1) A (2) B (3) C (4) D (.........)

Department of Examinations

**2019**

- 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை இடைப்புக்குறியினுள்ளெ உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

01 கற்கோளத்தின் ஒரு பகுதியாகக் காணப்படும் புவியோடு, புவியின் திணிவில் ............ஆகக் காணப்படுகின்றது.

(1% / 5 % / 10%)

02 முழுமையாகவே தென்கோளத்தில் அமைந்திருக்கும் கண்டம்..................... ஆகும்.

(தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்ரேலியா)

03 உலகின் காலநிலைப் பரம்பல் பற்றிய கருத்தினை முதன் முதலில் முன்வைத்தவர் ............... ஆவார்.

(தொலமி, அரிஸ்டோட்டல், ஏராற்ரோதெனிஸ்)

04 நொறின் 10 எனப்படுவது உயர் விளைச்சல் தரும் ....................... இனமாகும்.

(நெல், கோதுமை, பருத்தி)

05 இலங்கையில் விவசாயத் தொழினுட்பப்பூங்கா ............................. என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

(கன்னொறுவா, அங்குணகொலபெல்லச, மாத்தளை)

- 6 தொடக்கட் 10 வரை தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் ச யையும் பிழையாயின் பி யையும் சுற்றி வட்டமிடுக.

06 சமுத்திரத்தரையில் ஏற்படும் பல்வேறு நடுக்கங்களின் காரணமாக கரையை நோக்கி வரும் மிகப்பெரிய சமுத்திர அலைகள் சுனாமி அலைகள் என அழைக்கப்படும். (ச / பி)

07 இலங்கையில் ஆழ்கடல் மீனிபிடிக் கைத்தொழில் மூலமே மிக அதிகளவிலான மீன் உற்பத்தி இடம்பெறுகின்றது. (ச / பி)

08 இலங்கையில் தற்பொழுது உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் தரமானது அதிகரிப்பதற்கு அதன் உற்பத்திச் செயன்முறையின் போது பல்வேறு இரசாயன மூலகங்கள் கலக்கப்படுவே காரணமாகும். (ச / பி)

09 பொருட்களின் உற்பத்திக்காகச் செலவிடப்படும் பணத்தைவிட கைத்தொழிலுடன் தொடர்புடைய ஆய்வுகளுக்காக அதிகளவு பணம் செலவிடப்படுதல் இலத்திரனியல் கைத்தொழிலின் விசேட பண்பாகும். (ச / பி)

10 ஆனைவிழுந்தான் புகலிடம், புந்தல தேசியபூங்கா, மாதுகங்கை ஆகியன சர்வதேச முக்கியத்துவத்தினைக் கொண்ட ஈரநிலங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள மூன்று அமைவிடங்களாகும். (ச / பி)

- 11 தொடக்கம் 18 வரையள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களக்கப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

11 ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகளில் மிக அதிக எண்ணிக்கையான மக்கள் வாழும் இரண்டு நாடுகளாவன சீனாவும் ............................... ஆகும்.


12 இலங்கையிலுள்ள ஆறுகளில் பாரிய நீரேநதுப் பகுதியைக் கொண்டிருப்பது ................ ஆறு ஆகும்.

13 புவியின் உட்பகுதியில் காணப்படும் மக்மா குளிர்ச்சியடைந்து திண்மமாதல் ஊடாக .......... பாறை உருவாக்கப்படுகின்றது.

14 புவியினூாக ஊடுபரவும் மழைநீர் உட்புகமுடியாத பாறைப் படைகளில் தேங்கி நிற்பதனால் உருவாவது ............................... நீர் எனப்படும்.

15 ஆயுள் எதிர்பார்க்கு, எழுத்தறிவு, கொள்வனவுச் சக்திக்கு இசைவான தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி என்பன ................................. சுட்டெண்ணை அளவிடுவதற்குரிய தகுதி விதிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

- தரப்பட்டுள்ள வரைபினை பயன்படுத்தி 16 தொடக்கம் 18 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.




மேற்குறித்த வரைபின்படி

16 தேயிலை உற்பத்தி அதிகளவில் இடம்பெற்றுள்ள ஆண்டு .............................. ஆகும்.

17 உற்பத்தியில் அதிகளவான வேறுபாடு ....................................... பயிர்ச்செய்கைத்துறையில் காணப்படுகின்றது.

18 ஒப்பீட்டளவில் தேயிலை, இறப்பர் துறைகளில் குறைந்தளவு உற்பத்தி ..................... ஆம் ஆண்டில் காட்டப்பட்டுள்ளது.

- 19 தொடக்கம் 22 வரையுள்ள அ மற்றும் ஆ என இரண்டு நிரல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிரலில் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினது இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

19

| அ<br>சக்தி | ஆ<br>சக்தி நிலையத்தின் அமைவிடம் |
|---|---|
| 1 காற்று | A இங்கினியாகலை |
| 2 நீர் மின்சாரம் | B கெரவலபிட்டிய |
| 3 வெப்ப மனிசாரம் | C புத்தளம் |
| | D பருதகந்த |

1 ABC 2 CAB 3 CBA 4 DBC (........)

20

| அ<br>காடுவகை | ஆ<br>தாவரத்தின் இயல்பு |
|---|---|
| 1 அயன ஈர வலயம் | A கிரல, டியகதுரு, ஜின்பொல் போன்ற தாவரங்கள் |
| 2 மலைநாட்டு உலர் வலயம் | B கள்ளி, எரமினிய போன்ற முள் தாவரங்கள் |
| 3 கண்டல் | C கொார, கீன, மிடெல்ல போன்ற மரங்களின் விதானப் படைகளின் எண்ணிக்கை |
| | D புல்வகைகள், மகரத்மல், அரலு, நெல்லி, கஹட்ட போன்ற தாவரங்கள் |

1 ABD 2 BDA 3 CAB 4 CDA (........)

21

| அ<br>இரும்பு உருக்கு உற்பத்தி மையங்கள் | ஆ<br>நாடு |
|---|---|
| 1 சான்சிங்வான் | A ஐக்கிய அமெரிக்கா |
| 2 நாகோயா | B சீனா |
| 3 பேர்மிங்காம் | C ஐக்கிய இராச்சியம் |
| | D ஜப்பான் |

1 ABC 2 BCA 3 BDC 4 CBA (........)


22

| அ<br>நகரம் | ஆ<br>அண்மையிலுள்ள ஆறு |
|---|---|
| 1 ஷாங்காய் | A நைல் |
| 2 கராச்சி | B சிந்து |
| 3 கெய்ரோ | C குவாங்கோ |
| | D யாங்சிகியாங் |

1 ABC 2 CBA 3 DAB 4 DBA (........)

- கிழெ துருப்புடுடுள்ள வரைபடத்தைப் பயன்படுத்தி 23 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

குளம் ஒன்றும் நீர்ப்பாசனக் கால்வாய்களும் காட்டப்பட்டுள்ள இவ்வரைபடத்துக்கமைய




23 குளத்தின் நீரைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதியைக் குறித்துக்காட்டும் ஆங்கில எழுத்து யாது

1 A 2 B 3 C 4 D

24 குளத்தின் ஒதுக்குப் பகுதி அமைந்துள்ள இடத்தினைக் குறித்துக்காட்டும் எழுத்து யாது?

1 A 2 B 3 C 4 D

25 குளத்துக்கு அண்மையில் குடியிருப்புக்களை அமைப்பதற்கு மிகவும் பொருத்தமான பகுதிகளைக் காட்டும் இரண்டு எழுத்துக்களைக் கொண்டிருக்கும் விடையைத் தெரிவுசெய்க.

1 AC 2 AD 3 BD 4 CD

- 26 தொடக்கம் 36 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தினை எதிரெயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

26 இலங்கையின் அகலக்கோட்டு அமைவிடத்தினைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

1 $5^0$ 55 வ தொடக்கம் $9^0$ 51 வ வரை 2 $6^0$ 55 வ தொடக்கம் $9^0$ 50 வ வரை

3 $5^0$ 55 வ தொடக்கம் $8^0$ 51 வ வரை 4 $6^0$ 00 வ தொடக்கம் $10^0$ 00 வ வரை

27 இலங்கையைச் சூறாவளிகள் பெரும்பாலும் பாதிப்பது

1 மார்ச் தொடக்கம் மே வரையாகும் 2 ஆகஸ்ட் தொடக்கம் ஒக்டோபர் வரையாகும்.

3 ஒக்டோபர் தொடக்கம் டிசெம்பர் வரை 4 டிசெம்பர் தொக்கம் பெப்பிரவரி வரையாகும்.

28

- வருடம் முழுவதும் $18^0C$ இற்கு மேற்பட்ட வெப்பநிலை
- மாரிகாலம் இல்லை
- வருடம் முழுவதும் பரவலாக அதிக மழைவீழ்ச்சி காணப்படும்

மேலே குறிப்பிட்ட பண்புகளை உள்ளடக்கிய காலநிலை வகை எது

1 இடைவெப்பக் காலநிலை 2 மத்தியதரைக் காலநிலை

3 துந்திராக் காலநிலை 4 அயனக் காலநிலை

29 நிலத்தினால் முற்றாகச் சூழப்பட்ட கடல்களின் சோடி எது?

1 போல்டிக் கடல், செங்கடல் 2 அராபியன் கடல், அற்றியாற்றிக் கடல்

3 கஸ்பியன் கடல், ஏரல் கடல் 4 கருங்கடல், மஞ்சள் கடல்

30 இலங்கையின் ஈரவலயத்தில் அமைந்துள்ள நெல் ஆராய்ச்சி நிலையம் எது

1 போம்புவெல 2 பத்தலகொட 3 மகா இலுப்பலாம 4 அம்பலாந்தோட்டை

31 இலங்கையில் உவர் நீர் மீன்பிடிக் கைத்தொழில் முக்கியத்துவம் பெற்ற மூன்று இடங்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

1 தங்காலை, மிரிச, காலி
2 புத்தளம், சிலாபம், முந்தல்
3 திருகோணமலை, யாழ்ப்பாணம், கொக்கிளாய்
4 சிலாபம், பெந்தோட்டை, பேருவளை

32 இலங்கையில் அண்மைக் காலங்களில் கேள்விக்கு ஏற்றவாறு உயர்வான வளர்ச்சி வீதத்தினைக்காட்டியுள்ள விலங்கு வேளாண்மைத்துறை

1 பால் உற்பத்தித்துறை
2 கோழி வளர்ப்புத்துறை
2 ஆடு, செம்மறி வேளாண்மைத்துறை
4 பன்றி இறைச்சி உற்பத்தித் துறை

33 இலங்கையின் சுற்றுலா வலயங்களில் புராதன நகரங்களின் வலயத்திற்குரிய நகரங்களை மாத்திரம் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

1 அனுராதபுரம், தம்புள்ளை, கண்டி
2 சிகிரியா, தம்புள்ளை, கதிர்காமம்
3 கண்டி, பொலன்னறுவை,யாழ்ப்பாணம்
4 திருகோணமலை, கண்டி, குருநாகல்

34 A – வரலாற்று ரீதியான மரபுரிமைகள் B புத்தாக்கங்கள் C இரக்கம்
D சூழலியல் மரபுரிமைகள் E விருநத்தோம்பல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலாக் கவர்ச்சிகளுள் தொட்டுணர முடியாத மரபரிமைகள் இரண்டைக் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

1 AB 2 BC 3 CE 4 DE

35 காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் பச்சைவீட்டு வாயுக்களைக் கொண்டிருக்கும் விடையைத் தெரிவுசெய்க.

1 மீதென், குளோரோபுளோரோகாபன், காபனீரொக்சைட்டு
2 நைதரசன் ஒட்சைட்டு, மீதென், ஒட்சிசன்
3 நீராவி, நைதரசன், காபனீரொக்சைட்டு
4 குளோரோபுளோரோகாபன், ஆகன், மீதென்

36 பின்வருவனவற்றுள் இலங்கையின் சனத்தொகை பரம்பலின்படி குறைவான சனத்தொகையைக் கொண்டமாகாணம் எது

1 கிழக்கு மாகாணம் 2 வட மத்திய மாகாணம் 3 ஊவா மாகாணம் 4 வட மாகாணம்

- A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகனை நன்கு அவதானித்து 37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| A | 1 பூகோள வெப்பநிலை<br>2 சமுத்திர நீர் மட்டம் | B | 1 குத்துயரம்<br>2 வளி அமுக்கம் |
| C | 1 சனத்தொகை வளர்ச்சி வீதம்<br>2 முதியோர் சனத்தொகை | D | 1 சூழல் மாசுபடுதல்<br>2 சூழலுக்குள் கழிவுகள் வெளியேற்றம் |

37 முதலாவதின் அதிகரிப்பு இரண்டாவதன் வீழ்ச்சிக்குக் காரணமாகும் தலைப்புச் சோடி

1 A 2 B 3 C 4 D

38 முதலாவதின் அதிகரிப்பு இரண்டாவதினதும் அதிகரிப்புக்குக் காரணமாகும் தலைப்புச் சோடி

1 A 2 B 3 C 4 D

39 இரண்டாவதின் வீழ்ச்சி முதலாவதினதும் வீழ்ச்சிக்குக் காரணமாகும் தலைப்புச்சோடி

1 A 2 B 3 C 4 D

40 முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையில் நேரடியான தொடர்பினைக் கொண்டிராத தலைப்புச்சோடி

1 A 2 B 3 C 4 D